# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி
## லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

**கோவில்பட்டி மே 18, 2019 (சனிக்கிழமை)**

18.05.2019 (சனிக்கிழமை) நடைபெற்ற பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்.

**7வது லீக் ஆட்டம்:** செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே மற்றும் சென்னை ஐசிஎப் அணி.

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு சுழற் கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டிகள் கால் இறுதி ஆட்டம் வரை லீக் முறையிலும், அரை இறுதி மற்றும் இறுதி போட்டிகள் அனைத்தும் நாக் அவுட் முறையிலும் நடைபெறுகிறது.

**போட்டியின் 3வது நாளான இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற 7வது லீக் ஆட்டத்தில் செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணியுடன் சென்னை ஐசிஎப் அணி மோதியது.**

**இதில் 3:2 என்ற கோல் கணக்கில் செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வெற்றிப் பெற்றது.**

20-வது நிமிடத்தில் செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் ஷிஷி கௌடா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

28-வது நிமிடத்தில் செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் சந்தீப் குமார் சிங் ஒரு பீல்டு கோல் போட்டார்.

31-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப் அணி வீரர் சஞ்சய் ஷால்ஷோ ஒரு பீல்டு கோல் போட்டார்.

51-வது நிமிடத்தில் செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் ஷிஷி கௌடா ஒரு பீல்டு கோல் போட்டார்.

60-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப் அணி வீரர் ஷியாம்குமார் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ஷாகில் அகமது மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **ஷிஷி கௌடா,** சவுத் சென்ட்ரல் ரயில்வே, செகந்தராபாத்.

(Refer Photo - LASA2019_18052019_LEAGUE_7_Photo)

**8வது லீக் ஆட்டத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணியுடன் கோவில்பட்டி லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி அணி மாலை 6.30 மணியளவில் மோதியது.**

**இதில் 6:0 என்ற கோல் கணக்கில் சென்னை தெற்கு இரயில்வே அணி வெற்றிப் பெற்றது.**

2-வது நிமிடத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணி வீரர் மகேந்திரன் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

24-வது நிமிடத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணி வீரர் நம்பி ஹண்டா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

28-வது நிமிடத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணி வீரர் மகேந்திரன் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

47-வது நிமிடத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணி வீரர் கார்த்தி ஒரு பீல்டு கோல் போட்டார்.

48-வது நிமிடத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணி வீரர் செல்வராஜ் ஒரு பீல்டு கோல் போட்டார்.

56-வது நிமிடத்தில் சென்னை தெற்கு இரயில்வே அணி வீரர் ரகுராம் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. மல்ஹைட் சிங் மற்றும் திரு. கீர்த்தி முத்தப்பா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **நம்பி ஹண்டா,** தெற்கு இரயில்வே, சென்னை.

(Refer Photo - LASA2019_18052019_LEAGUE_8_Photo)

**மேலும் 9வது லீக் ஆட்டத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டமஸ் & ஜிஎஸ்டி அணியுடன் சென்னை இந்தியன் வங்கி அணி இரவு 8.30 மணியளவில் மோதியது.**

**இதில் 3 : 2 என்ற கோல் கணக்கில் ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வெற்றிப் பெற்றது.**

3-வது நிமிடத்தில் ஆல் இந்தியா கஸ்டமஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் மோசஸ் புலன்தாரா ஒரு பீல்டு கோல் போட்டார்.

10-வது நிமிடத்தில் சென்னை இந்தியன் வங்கி அணி வீரர் ஹரீஷ் எஸ் முதாகர் ஒரு பீல்டு கோல் போட்டார்.

49-வது நிமிடத்தில் ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் திம்மன்னா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

52-வது நிமிடத்தில் ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் விஷால் சிங் ஒரு பீல்டு கோல் போட்டார்.

59-வது நிமிடத்தில் சென்னை இந்தியன் வங்கி அணி வீரர் சோமனா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. ராஜ்குமார் ஜா மற்றும் திரு. அமித் ஷையினி ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **விஷால் சிங்,** ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி

(Refer Photo - LASA2019_18052019_LEAGUE_9_Photo)

**நாளை 19.05.2019 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் போட்டிகள்:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1 | 4.30 pm | ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே, புவனேஷ்வர் | சிஜஎஸ்எப், சண்டிகர் |
| 2 | 6.15 pm | யூனியன் வங்கி, மும்பை | லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி, கோவில்பட்டி |
| 3 | 8.00 pm | பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், பெங்களூர் | ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி, மும்பை |